


24. 03. 2026

தலைப்புச் செய்திகள்

- மேற்காசியா நெருக்கடி நிலைமை குறித்து பிரதமர் திரு. நரேந்திரமோடி மாநிலங்களவையில் இன்று உரையாற்றுகிறார்.
- இந்திய தர நிர்ணயம் B.I.S கடந்த 10 ஆண்டுகளில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களுடன் மேம்பட்டுள்ளதாக மத்திய நுகர்வோர் விவகாரங்களுக்கான அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.
- தமிழக சட்டப்பேரவை தேர்தலில் திமுக கூட்டணியில் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு 8 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில், தமிழ் மாநில காங்கிரஸுடனான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.
- இத்தாலியில் நடைபெறும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் சுமித் நாகல், செக் குடியரசின் Vit Kopriva இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

*************

பிரதமர்

மேற்காசியா நெருக்கடி நிலைமை குறித்து பிரதமர் திரு.நரேந்திரமோடி மாநிலங்களவையில் இன்று உரையாற்றுகிறார்.

நேற்று மக்களவையில் மேற்காசிய நிலைமை குறித்தும், நாட்டு மக்களின் பாதுகாப்பிற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் பிரதமர் விரிவாக எடுத்துரைத்த நிலையில் மாநிலங்களவையில் இன்று பிற்பகல் பிரதமர் உரையாற்றுவது முக்கியத்துவம் பெறுகிறது.

*************

பிரல்ஹாத் ஜோஷி

இந்திய தர நிர்ணயம் BIS கடந்த 10 ஆண்டுகளில் மாபெரும் மாற்றங்களுடன் வளர்ச்சி கண்டிருப்பதாக மத்திய நுகர்வோர் விவகாரங்களுக்கான அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அமைச்சர் தொழில்நுட்ப மேம்பாட்டுடனும், சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கு பயன்பெறும் வகையிலும் BIS தர நிர்ணயம் மேம்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

உற்பத்தி மற்றும் வர்த்தகம் சார்ந்த தரத்தை கருத்தில் கொண்டு 2015ஆம் ஆண்டு முதல், மத்திய அரசு பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

"பாதிப்பற்ற, குறையற்ற நிலை" என்ற பிரதமரின் கோட்பாட்டிற்கு ஏற்ப கடந்த 11 ஆண்டுகளாக இந்திய தர நிர்ணயம் BIS பல்வேறு தர மேம்பாடுகளுடன் ஆக்கப்பூர்வமாக மாற்றப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

*************

அஷ்விணி வைஷ்ணவ்

ரயில்வே துறையில் 5 முக்கிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் ரயில் டிக்கெட் ரத்து மற்றும் கட்டணம் திருப்பி செலுத்துவதற்கான விதிகளில் சீர்திருத்தங்கள்,

ரயில் பயணியர் புறப்படும் இடம் மாற்றம்,

உப்பு மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து,

கட்டமைப்பின் தர மேம்பாடு ஆகிய 5 சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட இருப்பதாக குறிப்பிட்டார்.

*************

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

மத்திய அரசின் தொடர் முயற்சிகளால் விவசாயிகளின் வருவாய் கணிசமாக உயர்ந்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அமைச்சர் வேளாண் துறைக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

உணவு உற்பத்தியும் 44 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்றார்.

*************

மக்களவை

மக்களவையில் 2026-ம் ஆண்டிற்கான நிதி மசோதா குறித்த விவாதம் இன்று தொடர்ந்து நடைபெறுகிறது.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நேற்று மக்களவையில் சமர்ப்பித்த இந்த மசோதா மீதான விவாதத்தில் இன்று உரையாற்றிய காங்கிரஸ் உறுப்பினர் திரு.மணீஷ் திவாரி, ஹார்மஸ் நீரினை மூடப்பட்டதால் உலகம் முழுவதிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

உலகளாவிய நெருக்கடி சூழலில் மத்திய அரசின் பட்ஜெட் செல்லுபடியாகுமா என்று கேள்வி எழுப்பினார்.

பிஜேபி உறுப்பினர் திரு. நவீன் ஜிந்தால் பேசுகையில் விவசாயிகளுக்கு பசுமையும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பையும், 140 கோடி இந்தியர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதத்தையும், இம்மசோதா வழங்குவதாக குறிப்பிட்டார்.

கடந்த ஐந்தாண்டுகளில் நேரடி மற்றும் மறைமுக வரிகளின் வசூல் பெருமளவு அதிகரித்திருப்பதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

*************

காச நோய் தினம்

உலக காச நோய் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள செய்தியில் தேசிய காசநோய் ஒழிப்பு இயக்கத்தில் பங்கேற்பதோடு இந்நோயை முடிவுக்கு கொண்டு வர அனைவரும் ஒருங்கிணைந்து செயலாற்ற வலியுறுத்தியுள்ளார்.

மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா இரண்டாம் கட்ட காசநோய் இல்லா பாரத 100 நாட்கள் இயக்கத்தை புதுதில்லியில் இன்று தொடங்கிவைக்கிறார்.

பல்வேறு காச நோய் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

காசநோயை முற்றிலும் ஒழிக்க விழிப்புணர்வு அவசியம் என்று திருச்சியை சேர்ந்த ஆஸ்துமா அலர்ஜி தொற்றுநோய் மருத்துவர் டாக்டர்.கமல் கூறுகிறார்.

- கமல் வாய்ஸ் -

*************

தமிழக தேர்தல்

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தொடங்க இன்னும் ஐந்து நாட்களே எஞ்சியுள்ள நிலையில் திமுக மற்றும் அஇஅதிமுக கூட்டணியில் தொகுதி பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தைகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் விடுதலை சிறுத்தை கட்சிக்கு 8 தொகுதிகள் இன்று ஒதுக்கப்பட்டது.

இதற்கான உடன்படிக்கை திமுக தலைவரும் முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திரு.தொல் திருமாவளவன் முன்னிலையில் இன்று எட்டப்பட்டது.

திமுக கூட்டணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு நேற்று 5 இடங்கள் ஒதுக்கப்பட்ட நிலையில், மக்கள் நீதி மய்யம் மற்றும் தேமுதிக உடனான தொகுதி பங்கீடு இன்னும் எட்டப்படவில்லை

அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் பாஜகவிற்கு 27 இடங்களும்,

பா.ம.க.விற்கு 18-ம்

அ.ம.மு.க-விற்கு 11 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இக்கூட்டணியில் இடம்பெற்றுள்ள தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியுடனான தொகுதி பங்கீடு இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

தொகுதி பங்கீடுக்கான பேச்சுவார்த்தைகள் முனைப்புடன் நடைபெற்று வருகின்றன.

*************

தேர்தல் ஆணையம்

தமிழக சட்டமன்ற பொது தேர்தலுக்கான வாக்குப்பதிவு அடுத்த மாதம் 23ஆம் தேதி நடைபெறும் நிலையில் வாக்குப்பதிவிற்கு முந்தைய மற்றும் பிந்தைய கருத்துக்கணிப்புகளின் முடிவுகளை வெளியிட தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.

இதன்படி அடுத்த மாதம் 9ஆம் தேதி காலை 7 மணியிலிருந்து அடுத்தமாதம் 29ஆம் தேதி மாலை ஆறரை மணிவரை வாக்குப்பதிவிற்கு பிந்தைய கருத்து கணிப்புகளை நடத்துவதற்கும், அதனை ஊடகங்கள் வாயிலாக வெளியிடுவதற்கோ, அல்லது ஏதேனும் வேறுமுறையில் பரப்புவதற்கோ தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு முடிவடைந்த 48 மணி நேர கால அளவில், கருத்து கணிப்புகளோ, அல்லது பிற வாக்குப்பதிவு ஆய்வு முடிவுகளோ உட்பட எந்வொரு தேர்தல் விவகாரத்தையும் மின்னணு ஊடகத்தில் காட்சிபடுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார்.

*************

வேட்பு மனு பரிசீலனை

புதுச்சேரி யூனியன் பிரதேசம் மற்றும் கேரளம், அஸ்ஸாம் மாநிலங்களில் வரும் 9ஆம் தேதி ஒரேகட்டமாக நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்கள் இன்று பரிசீலிக்கப்படுகின்றன.

மனுக்களை திரும்ப பெற நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

இத்தேர்தலுடன் கோவா, கர்நாடகா, திரிபுரா சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பு மனுக்களும் இன்று பரிசீலிக்கப்படுகின்றன.

*************

வாக்குப்பதிவு இயந்திரங்கள்:

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் சரிபார்க்கப்பட்டு அந்தந்த பகுதிகளுக்கு அனுப்பி வைக்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

திருவாரூர் மாவட்டத்தில் 4 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும்,

திருச்சி மாவட்டத்தில் 9 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும்,

ஈரோடு மாவட்டத்தில் 8 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் இன்று அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 8 சட்டப்பேரவை தொகுதிகளில் பயன்படுத்தப்பட உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

செங்கல்பட்டு மாவட்டம் மறைமலை நகர் நகராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த மின்னணு இயந்திரங்கள் 7 சட்டமன்ற தொகுதிகளுக்கு அனுப்பிவைக்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அதிகாரி மாலதி ஹெலன் இன்று தொடங்கிவைத்தார்.

*************

தூத்துகுடி:

தமிழக சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி வாக்குப்பதிவிற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் அனைத்து மாவட்டங்களிலும் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தூத்துகுடியில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி வ.உ.சி கல்வியியல் கல்லூரியில் 50 அடி நீள கார்ட்டூன் வரைந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக இதில் பங்கேற்ற மாணாக்கர் தெரிவிக்கின்றனர்.

மாணாக்கர் வாய்ஸ்

*************

நாமக்கல்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் வாக்களிப்பதன் அவசியத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி துர்கா மூர்த்தி வலியுறுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

காட்டு தீ

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பக வனப்பகுதியில் கடும் வறட்சி காரணமாக ஏற்பட்ட காட்டுத்தீயால் அப்பகுதியில் மரங்கள், செடி, கொடிகள் தீயில் கருகின.

புதுதொட்டி வனப்பகுதியில் தீயணைப்பு வீரர்களுடன் இணைந்து வனத்துறையிர் தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

*************

டென்னிஸ்

இத்தாலியில் நடைபெறும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் சுமித் நாகல், செக் குடியரசின் Vit Kopriva இணை – போலந்து, உக்ரைன் இணையை இன்று எதிர்கொள்கிறது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது